ரூ. 5.00


மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

தமிழ் ஆண்டு 2039
ஆவணி - ஆகஸ்ட் 2008

நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்

- மகாகவி பாரதி



நாடு உயர்ந்தால் நாமும் உயர்வோம்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	5-00
ஆண்டுச் சந்தா	ரூ.	60-00
ஆயுட் சந்தா	ரூ.	600-00
புரவலர் கட்டணம்	ரூ.	1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ்ஆண்டு 2039	மாதம் : ஆவணி
மலர் : 23	இதழ் : 8

ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!

"ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று மகாகவி பாரதி அடிமை இந்தியாவில் ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டதாய் மார் தட்டிப் பாடினார்! இன்று சுதந்திர இந்தியாவின் 62 வது சுதந்திரதினவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால் அச்சத்துடன் பதற்றத்துடன், தீவிரப்பாதுகாப்பு ஏற்பாடுகள், கண்காணிப்புகளுக்கு இடையே தான் சுதந்திரதினவிழாக் கொண்டாடுகின்றோம். அச்சம், பாதுகாப்பின்மை, ஏழ்மை, வன்முறை, தீவிரவாதம் இவற்றுக்கு இடையே உழல்வதற்கோ சுதந்திரம் பெற்றோம்?

> "தண்ணீர் விட்டோ வளர்த்தோம்! சர்வேசா இப்பயிரைக்
> கண்ணீரால் காத்தோம்!"

என்று பாரதி பாடியதைப் போல் கண்ணீரும், செந்நீரும் சிந்திப் பெறப்பட்ட விடுதலை தேசம்! எத்தனை எத்தனையோ மகத்தான மாமனிதர்களின் தியாகத்தின் மேல்தான் பட்டொளிவீசிப் பறக்கிறது "தாயின் மணிக்கொடி!" பகத்சிங் மரணதண்டனையை எதிர்நோக்கிக் காத்து இருக்கின்றார்! தூக்குக் கயிற்றை முத்தமிடுவதற்கு முன்பு கூடச் சஞ்சலமற்றுத் துணிவோடு இருக்கின்றார்! தூக்குத் தண்டனைக் கைதியைத் தினம் தோறும் மருத்துவப் பரிசோதனை செய்வது

சிறையின் நடைமுறை! மரணத்தண்டனை நிச்சயிக்கப்பட்ட கைதியின் எடை பரிசோதிக்கப்படும்! வழக்கமாக எந்த மரண தண்டனைக் கைதியின் எடையும் மனஉளைச்சலால் நாளும், நாளும் குறைந்து கொண்டே போகும். ஆனால் வழக்கத்திற்கு மாறாக பகத்சிங்கின் எடை நாளும், நாளும் கூடிக்கொண்டே போனது. மருத்துவர்கள் ஆச்சரியமாக, பகத்சிங்கைப் பார்த்து, "எப்படி எடை கூடியது?" என்று கேட்டார்கள்! பகத்சிங் பெருமிதமாகச் சொன்னார்!

"நான்தான் என் தேசத்திற்காக என் உயிரைத் தரப் போகின்றேனே! அந்த மகிழ்ச்சியில் தான் என் எடை கூடியது" என்று பெருமையுடன் கூறினார்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு வீரத் தமிழர் கப்பல் ஓட்டினார்! வெள்ளை ஏகாதிபத்தியம் விதித்த தண்டனைகளுக்காக இரண்டு பிறவிகள் எடுக்க வேண்டும்! இரட்டை ஆயுள் தண்டனை! வெள்ளை ஏகாதிபத்தியம் சுதேசிக் கப்பலை அடிமாட்டு விலைக்குக் கேட்டது! "நடுக்கடலில் என் கப்பல் துருப்பிடித்து அழியுமே ஒழிய ஒருபோதும் வெள்ளை ஏகாத்பத்தியத்திற்கு விற்கமாட்டேன்" என்று சூள் உரைத்த தன்மானத் தமிழர் வ.உ.சி.க்கு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பைக் கேட்டுச் சித்தம் கலங்கிப் போய்ப் பித்தானார் அவர் உடன்பிறந்த தம்பி. தன் உடன்பிறந்தவனுக்காகச் சொந்த ஊர் மக்களிடம் ஒரு பிச்சைக்காரனைப் போல் கேட்கின்றார், தேசத்திற்காகத் தன்னைத் தந்த அந்த தியாகச் செம்மல்! "தேசத்திற்காக நான் உழைத்ததற்கு வெள்ளை ஏகாதிபத்தியம் தந்த விலை கண்டு என் தம்பி நிலை கலங்கிப் போனதை நீங்கள் அறிவீர்கள்! அவன் இப்பொழுது தெருஓரத்தில் எச்சில் இலைகளுக்காக நாய்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருப்பான்! எனக்காக அவனுக்கு ஒரு வேளை உணவைத் தாருங்கள்!" எனது அருமை தூத்துக்குடி வாழ் ஜவுளி வணிகப் பெருமக்களே! என் தம்பி கந்தல் உடைகளோடு பைத்தியமாய்ச் சுற்றித் திரிந்து கொண்டிருப்பான்! எனக்காக அவனுக்கு ஒரு மாற்று உடை தாருங்கள்!" என்று உருக்கமாகக் கேட்கின்றார்!

வ.உ.சி.யின் தோழர் சுப்பிரமணியசிவா!

"சிவம் பேசினால் சவம் எழுந்து நிற்கும்!" அவருக்குக் கிடைத்த பரிசோ தொழுநோய்!

"என்று தணியும் இந்த
சுதந்திர தாகம்!"

என்று தவியாய்த் தவித்துப் பெற்ற சுதந்திரம், காற்றில் கரைந்த கற்பூரமாய்ப் பயனற்றுப் போய்விடாமல்,

இலட்சிய பாரதத்தை உருவாக்குகின்ற திசை நோக்கிச் செயல்படவேண்டும்!

தேசத்திற்காக, தியாகசீலர்கள் விட்ட கடைசி மூச்சுக் காற்றில் சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும் தேசத்தில்,

ஏழ்மை இல்லாத இந்தியா,
வறுமை இல்லாத இந்தியா
தீண்டாமை இல்லாத இந்தியா
வேற்றுமை இல்லாத இந்தியா
வன்முறை இல்லாத இந்தியா

உருவாகப் பாடுபடுவோம்!

பொன்னம்பல அடிகளார்

செயலாகாத சிந்தனை!

சிந்திக்கத் தூண்டாத கல்வி, கேள்வி, ஊமை வாய்மொழி. செயலைத் தூண்டாத சிந்தனை வெறும் பகற்கனவு. செயலாக்கம் பெறாத சிந்தனை, நறுமணம் பரப்பாத மலர். செயலாகாத சிந்தனை, கறிக்குதவாத ஏட்டு சுரைக்காய், மௌன பாஷை பேசும் ஊமைப் பாடல். அடுப்பில் ஏற்றி வைக்காத உலைப்பானை உணவுக்கு உதவாததைப் போலச் செயலாகாத சிந்தனை பலன் தராது.

– தவத்திரு. **பொன்னம்பல அடிகளார்**

நன்றி : சமயவாழ்வு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

90. பெரியாரைப் பிழையாமை

தம்மில் பெரியாரை மதித்து ஒழுகுதல்; அவமதிக்காமல் மதித்தல். பெரியார் என்பதற்குத் தவத்தர் என்று பொருள் கொள்ளல் பொருந்தாது. சினம் கொள்ளுதலும் அவ்வழித் துன்புறுத்தலும் தவம் ஆகா.

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. (891)

ஆற்றலோடு கடமைகளைச் செய்யும் வலிமையுடைய தக்காரை அவமதிக்காமல் மதித்துப் போற்றுதல் காப்பினுள் எல்லாம் சிறந்த காப்பாகும்.

கருதியது செய்து முடிக்கும் ஆற்றலுடையார் உறவினை மதித்துப் போற்றி ஒழுகினால் அவர்தம் ஆற்றல் காப்பாக அமையும்.

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். (892)

தம்மில் பெரியாரை மதிக்காது ஒழுகின் அப்பெரியாரால் தீராத் துன்பங்கள் வரும்.

பெரியாரை மதிக்காத மனநிலையில் தாமே துன்பங்களை வரவழைதது்க் கொள்ளுதல் உண்டு. காப்பில் பயனில்லை.

கெடல் வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. (893)

ஒருவன் கெட்டுப் போக நினைத்தால் தம்மில் பெரியாரிடம் கேட்காமல் செய்க. உன்னை அழித்துக் கொள்ள வேண்டுமானால் உன்னிலும் பெரியாருக்கு அவமதிப்பினைச் செய்க. தம்மில் பெரியாரைக் கலந்து கேட்டுச் செய்தல் வெற்றிக்கு வாயில்.

கூற்றத்தைக் கையால் விளித்தாற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். (894)

9/1

தம்மில் வலிமையுடையாருக்குத் துன்பம் செய்தல் கூற்றுவனை அழைத்தது போன்றது. தம்மில் வலிமையுடையோரைப் பகைத்துக் கொள்ளல் மரணத்தை அணைத்துக் கொண்டது போல் என்பது கருத்து.

யாண்டுச்சென்று யாண்டும உளராகார் வெம்துப்பின்
வேந்து செறப்பட் டவர் (895)

ஆற்றல் மிக்குடைய அரசரால் கோபிக்கப்பட்டவர்கள் எங்கும் சென்று உளராக வாழ்தல் அரிது. வேந்தன் இயல்பாகச் சினங்கொள்வான். அத்தகைய வேந்தனால் கோபிக்கப்பட்டவன் யாதொன்றுக்கும் ஆகான். அவன் யாண்டு செல்லலும் அரிது; வாழ்தல் அரிது.

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். (896)

நெருப்பினால் சுடப்பட்டாலும் தப்பித்துக் கொள்ளலாம். தம்மில் வலியரை அவமதிப்பவர்கள் வாழ்தல் அரிது. நெருப்பு தொடர்ந்து சுடுதல் இல்லை. வலியார் வஞ்சம்தீர்க்கும் வரை ஓயார். ஆதலால் வலியாரை அவமதிக்க வேண்டாம்.

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செயின். (897)

ஒருவன் பெறுதற்குரியனவெல்லாம் பெற்று வாழும் வாழ்க்கையும் வளமும் வலியாரின் பகை வந்துறின் என்ன செய்ய இயலும்?

குன்றுஅன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து (898)

குன்றனைய வலியார் மதிப்புக் குறைய நடப்பின் குடியொடு கூடி வாழ்ந்தவரும் கெடுவர் இந்த நிலத்தில்.

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (899)

காத்தற்கரிய, கொள்கையும் வலிமையுடையவர் கோபிப்பாராயின் அரசர்களும் பதவி இழப்பர். “வேந்து கெடும்” என்பதற்கு, தேவேந்திரன் என்று பொருள் கூறுதல் பொருந்தாது.

இறந்துஅமைந்த சார்புடையார் ஆயினும் உய்யார்
சிறந்துஅமைந்த சீரார் செறின். (890)

மிகப்பெரிய சார்புகளைப் பெற்றிருப்பினும் சிறந்த வலிமையுடையோர் சினப்பின் உய்தல் அரிது.

(தொடரும்)

அருளாலய கச்சத்தீவு

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

கழுவிடும்மீன் பலவற் றுள்ளும்
கச்சிதமாய் நழுவும் மீன்போல்
நழுவியநம் கச்சத் தீவை
நமக்காக மீட்கும் எண்ணம்
தழுவியநல் கால மாகத்
தமிழகத்துத் தலைவ ரெல்லாம்
கொழுவியநல் உணர்சசி பெற்ற
கொந்தளிப்பை வரவேற் போமே!

செந்தமிழ் வளர்த்த சேது
சமத்தான சொத்தாய் அந்த
நந்தமிழ்க் கடலெல் லைக்கு
நற்கச்சத் தீவு தானும்
பந்தமாய் இருந்த போது
பலரங்கே சென்று சென்று
சொந்தமாய் மீன்பி டித்தே
சுகமாகக் கரைசேர்ந் தாரே!

இடையிலே வந்த அந்த
இலங்கையின் சூட்சி யாலே
நடையிலே தளர்ந்த நாமும்
நயமாகத் தாரை வார்த்தோம்!
குடையிலே பொத்தல் தோறும்
கொட்டுமழை யெல்லாம் கொட்ட
குடையினைப் பிடித்தோர் மெய்யில்
கொண்டஆடை நனைதல் போல;

இருபத்தைந் தாண்டாய் நாமும்
இன்னலைக் கச்சத் தீவால்
இருமலுடன் சளிபோல் கொல்லும்
இடும்பையை என்சொல் வேண்நான்!
கரும்புகை இருட்டு வேளை
கடலுக்குள் சென்றோர் மீனை
விரும்பியே பிடித்து வந்து
விடியலில் தங்கு வார்கள்!

ஒய்வினை எடுத்துக் கொண்ட
ஓரிரு மணிக்குப் பின்னர்
சேய்கடல் சென்று மீண்டும்
சேகரித்த மீன்க ளோடு
தாய்கச்சத் தீவில் தங்கித்
தாவிடும் அலைகளுடே
பாய்மரப் படகை ஓட்டிப்
பரவசமாய் வருவா ரன்றே!

ஆபத்து வந்த போதும்
அரும்பசி உற்ற போதும்
தாபத்தைத் தீர்ப்ப தற்குத்
தக்கதாய் இருப்ப தோடு
பாபத்தைப் போக்கிக் கொள்ளப்
பக்தர்கள் வாங்கிச் செல்லும்
தீபத்தை மெழுகால் ஏந்தும்
தேவாலயம் ஒன்றும் உண்டே!

தீவினை இருநாட் டாரும்
திருக்கின்றிப் பயனைக் கொள்ள
தீவினைத் தாரை வார்த்த
தினத்திலே உரிமை பெற்ற
தீவினில் தமிழ்நாட் டார்கள்
தினம்மீனைப் பிடிக்கும் போது
தீவினைச் செய்யும் சிங்களர்
தினம்தடை செய்திட்டாரே!

இருவரின் உரிமை தன்னை
இருங்காற்றில் பறக்க விட்டே
ஒருவராய்க் கச்சத் தீவின்
உரிமையைப் பறித்த தோடே
பெருவாரி பிடித்த மீனைப்
பெற்றுக்கொண் டவரை யெல்லாம்
உருமாறிச் சுட்டுத் தள்ள
ஒருபோதும் கலங்கா ராகி;

சிறைபிடித்துச் செல்வ தோடு
சித்திரவதை செய்கின் றார்கள்!
மறைவாக எதையும் செய்யார்!
மனிதநேயம் இன்றிக் கேதப்
பறைகொட்டி மகிழ்வார் போலப்
பலகாலம் செய்கின் றார்கள்!
குறையென்று சுட்டிச் சொன்னால்
குதிக்கின்றார் திருக்கை வால்போல்!

தெருநாய்தான் கடித்து விட்டால்
திருப்பிநாம் கடிப்ப தில்லாத்
திருத்தமுறும் எண்ணம் கொண்டு
தினமும்நாம் இருப்ப தோடு
திருப்பிநாம் அவரைப் போலத்
திரும்பியே ஏதும் செய்யா
திருக்கவே எண்ணி னாலும்
திரும்பவும் செய்கின் றாரே!

திருந்தாத அவரைத் தானும்
திருத்தவே வேண்டு மென்றால்
திரும்பவும் அவரைப் போலத்
திருப்பியும் அடித்தால் தானே
திருந்துவார்; முள்ளை முள்ளால்
திறனுடன் எடுத்த லன்றோ
திருத்தகவு என்ற வாறாய்த்
திருக்கண் ணயர்ந்து விட்டேன்!

"பகைவனுக்கும் அருள்வாய்! என்ற
பதத்தினைச் சொன்ன வாறு
பதைபதைத்துப் பேசிய என்னை
பக்குவப் படுத்த வேண்டி
எதைஎதையோ ஆவே சத்தால்
எடுத்தவுடன் வாய்கூ சாமல்
புதைமணலில் ஆமை முட்டை
பொரித்தல்போல் பேச லாமா!

என்றேதான் பொங்கும் பாலில்
எளிதாய்நீர் ஊற்றி என்னை
நன்றேசரி செய்த பின்னர்
நயமாகப் பேச வந்தார்,
குன்றேறாய் காட்சி தந்த
குன்றக்குடி சந்நி தானம்!
ஒன்றேதான் கூறி னாரே
உபதேச மாக அந்தோ!

அப்போதே கச்சத் தீவை
அவருக்குத் தாரை வார்த்து,
ஒப்படைக்க முனைந்த போது,
ஒருவாறாய் நாட்டு மக்கள்
இப்போது செய்த தைப்போல்
இருந்தமிழ் உண்ணா நோன்பும்
தப்பின்றி இடைக்கா லத்தும்
தந்திடும் போராட் டத்தால்,

தடைசெய் திருந்தால், அந்தோ
தமிழ்நாட்டார் பலத்தைத் தானும்
அடையாளம் கண்டி ருப்பார்
அச்சிங்கள ராணு வத்தார்!
இடையிலே தடைசெய் திட்ட
இந்நாட்டின் இராமர் பாலத்
தடைகளுமே வந்தி ராது
தடுக்கின்ற சிலரால் தானே!

என்றாலும் பரவா யில்லை,
எல்லாநற் கட்சி தாமும்
இன்றேதான் விழித்துக் கொண்டே
இணைந்தேதான் செயல்பட் டாலே
நன்றேநாம் கச்சத் தீவை
நறுக்காகப் பெறலா மன்றோ!"
என்றேதான் சொல்லக் கேட்டு,
எழுந்தேன்அரு ளால யத்தே!

(ஆனி, சூன் 2008 இதழ்த் தொடர்ச்சி)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கைநெறி

(புலவர். **ச.மு. விமலானந்தம்**)

7. குளம் தோண்டிய குருடர் (ஞானக்கண் பெற்றவர்)

நம் முன்னோர் பழங்காலத்தில் பாசனத்திற்காகவும், குடிநீருக்காகவும் பற்பல ஏரி, குளங்களை அமைத்தனர். அவற்றால் அன்று தொட்டு இன்று வரை நாம் பயனடைந்து வருகிறோம். ஆனால் பல ஆண்டுகளாக ஏரி, குளங்களைத் தூ ர்த்துக் குடியிருப்பு இடங்களாக மாற்றி வருகின்றனர் மக்கள். அவ்வாறு மாற்றப்பட்ட பகுதிகள் பல பெயர்களில் சென்னையில் இருக்கின்றன. அந்தக் காலத்தில் ஆண்டுதோறும் ஏரி குளங்களில் தூர் எடுப்பார்கள். அந்த வழக்கம் நின்று போயிற்று. இப்போது தமிழக அரசு ஏரி, குளங்களில் தூரெடுக்கும் பணியைச் செய்து வருகிறது.

திருவாரூர் தியாகராசப் பெருமான் திருக்கோயிலின் மேற்கில் "கமலாலயம்" என்ற குளம் இருக்கிறது. அந்தக் குளத்தின் பக்கங்களில் தண்டியடிகள் அவ்வூரில் வாழ்ந்த காலத்தில் சமணர்கள் பாழிகளைக் (கோயிலை) கட்டினர். அதனால் குளம் தூர்க்கப்பட்டு வந்தது. அவ்வூரில் வாழ்ந்த கண்ணுள்ள மக்கள் அதைப் பார்த்தும் ஒன்றும் செய்யாமல் இருந்தனர். ஆனால், பிறக்கும்போதே பார்வையற்ற, நாள்தோறும் திருவாரூர் பூங்கோயிலுக்குச் சென்று வரும் தண்டியடிகள் "கமலாலயம்" என்ற குளம் தூர்க்கப்படுவதைப் பிறர் சொல்லக் கேட்டுப் பெருந்துயர் கொண்டார். அந்தக் குளத்தைத் தூரெடுத்துப் பெரிதாக்கப் பேராவல் கொண்டார்.

புறக்கண்ணில்லாத அவர் எவ்வாறு குளத்தைத் தோண்டிப் பெரிதாக்க முடியும்? புறத்தில் ஊனம் இருந்தாலும் அவர் அகத்தில் ஊனம் இல்லை. ஊக்கம் மிகுந்திருந்தது; அளவிலா ஆர்வமும் இருந்தது. அதனால் குளத்தைத் தோண்டும் முயற்சியில் முனைந்தார்.

தண்டியடிகள் குளத்தில் குழிதோண்டும் இடத்தில் ஒரு கோலை நட்டார்; குளக்கரையில் ஒரு கோலை நட்டார்; இரண்டையும் சேர்த்துக் கயிற்றால் கட்டினார்; அதனைப் பிடித்துக்கொண்டு குளத்தில் இறங்கினார்; மண்ணைத் தோண்டிக் கயிற்றைப் பிடித்தபடியே மேலே போய்க் கரையில் கொட்டினார். இவ்வாறு அவர் பல நாள் செய்தார். இடையில் சமணர் இடையூறுகள் செய்தனர். தண்டியடிகள் இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணாக இடையறாது முயன்று கமலாலயம் என்ற குளத்தை ஆழமும், அகலமும் உடையதாக ஆக்கினார். பிறகு ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி அந்தக் குளத்தில் இறைவனருளால் இரு கண்களையும் பெற்றார்; பிறகு ஞானக்கண்ணும் பெற்றுப் பிறவாப் பேரின்ப நிலையை அடைந்தார்.

தண்டியடிகள் இரண்டு கண்கள் இல்லாதிருந்தும் திருவாரூர் திருக்குளத்தைத் தோண்டும் திருப்பணியைச் செய்து சிறப்புற்றார். எனவே, உடல் ஊனமுடையோர் உள்ளம் தளராமல் ஊக்கமாய் உழைத்து உலகியலிலும், ஆன்மிகத்திலும் உயர வேண்டும். உனமுற்றோர் இத்தகைய திருப்பணி செய்தார் என்றால் ஊனமிலார் எத்தகைய திருப்பணிகளைச் செய்ய வேண்டும் என்று இயம்பவும் வேண்டுமோ?

உடல் ஊனமுற்றோராயினும், ஊனமற்றோராயினும் உள்ளத்தில் ஊனமற்றவராய் ஊக்கமுடைமை என்ற செல்வமுடையவராயிருத்தல் வேண்டும். உள்ளம் எப்பொழுதும் சிவசிந்தனையோடு இருக்க வேண்டும். எப்பொழுதும் எப்பணி செய்யினும் எம்பிரான் கழலிணையைச் சிந்திப்போமாக!

குடி, சூது முதலிய எல்லாத் தீங்குகளையும் விட மோசமானது நம்பிக்கைத் துரோகம் செய்வது. வஞ்சமனத்துடன் உறவைக் காட்டிப் பகையை முடிப்பது, இன்று இத்தகைய முத்தநாதன்கள் பல்கிப் பெருகிவிட்டனர். பல ஆண்டுகள் பழகியவர்கள்கூட அவர்களுடைய சுயநலம் நிறைவேறாத போது (பொதுநலத்திற்கு எதிரானது சுயநலம்) மறைவாகச் சூது செய்கின்றனர். இவர்களிடம் நாம் உறவு கொண்டு பழகிய காலமெல்லாம் பாழாகிறது.

- அருள்நெறித்தந்தை

குன்றையாதீனக் குருமணி தவத்திரு பொன்னம்ப அடிகளார் அவர்களின் திறம் பாடியது

திருமுக்கால்

(மூத்த தமிழறிஞர் பெரும்புலவர். **ப. அரங்கசாமி**)

திருமுக்கால் என்பது தமிழ்ப் பா வடிவங்களுள் (Format) ஒன்று. பா அமைப்பு முறை : அடிதோறும் ஈரசைச்சீர்கள் நான்குகொண்ட நாலடிப் பாட்டில் 1, 3 அடிகள் நான்கு சீர்களும், 2,4 அடிகள் மூன்று சீர்களும் கொண்டு, இரண்டாவது அடியே மூன்றாவது அடியாக மடக்கி வருமாறு பாடுவது. எண்சீர் அடியாயின் 1,3 அடிகள் எட்டுச் சீர்களும் 2,4 அடிகள் நான்கு சீர்களும் உடையதாய் அமைவது.

1. *குன்றையா தீனக் குருமா முனிவர்*
வென்றி விளைக்கும் விமலரே
வென்றி விளங்கும் விமலர் தவநெறி
குன்றாச் செவ்வுடைக் கோவே.

2. *தென்னந் தமிழும் தெய்வச் சைவமும்*
பின்னிப் பிணைத்துப் போற்றுவர்
பின்னிப் பிணைத்துப் போற்றும் அடிகள்
பொன்னம் பலமாம் பெயரரே

3. *குறள்நெறி தமிழ்க்குல அறநெறி அருள்நெறி*
உறவுடன் போற்றும் உரவோர்
உறவுடன் போற்றும் உரவோர் ஞானம்
பிறப்புடன் கொண்ட புங்கவர்

4. *திரைக்குள் இருந்த சைவம் தெருவில்*
பரவிடச் செய்த பாகையர்
பரவிடச் செய்த தலைகொள் பாகையர்
நரைபழுப் பில்லா நாயகர்

5. *ஊரில் ஓரம் வாழும் ஏழையர்*
சீர்பெற உழைக்கும் சிந்தையர்
சீர்பெற உழைக்கும் சிந்தனை யாளர்
ஊர்புகழ் உத்தம அடிகளே.

6. *அருள்நெறித் தந்தை அருளிய நெறிகளை*
மருளறக் காக்கும் மாதவர்
மருளறக் காக்கும் மாதவ அடிகள்
இருமொழி வல்ல துறவியே.

குறிப்பு :

1.	விமலர்	-	தூய்மையானவர்
2.	தென்னந்தமிழ்	-	தென்திசைத்தமிழ்
3.	உரவோர்	-	முனிவர், அறிஞர்
	புங்கவர்	-	உயர்ந்தோர், தேவர்
4.	பாகையர்	-	தலைப்பாகை உடையவர்
5.	மருள்அற	-	மயக்கம் இல்லாமல்
	இருமொழி	-	தமிழ், ஆங்கிலம்.

சுதந்திர நாட்டின் குடிமக்கள் அனைவரும் நாட்டின் வளர்ச்சிக்குரிய பணிகளில் ஈடுபட உரிமை உண்டு. ஈடுபடவும் வேண்டும். அவரவர் நிலைக்கு ஏற்பத் தாம் வாழும் ஊரின் நலனுக்கும், மேம்பாட்டுக்குமுரிய பணிகளிலாவது ஈடுபட வேண்டும். அதுவும் இயலாது போனால் குறைந்த பட்சம் ஊரின், சமூகத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்காமலாவது வாழ்தல் வேண்டும்.

சமூக ஒற்றுமைக்கு விரோதமாக, கோள் சொல்லுதல், சிண்டு - முடிந்து விடுதல் போன்றவற்றைத் தவிர்த்து விடுதல் வேண்டும். ஊரைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். வீதிகளில் குப்பைகளைப் போடுதல், கழிவு நீர்களை விடுதல் தவறு. பசுமையான மரங்களை வெட்டக்கூடாது. இங்ஙனம் நல்லன அல்லாதவற்றைச் செய்வதைத் தவிர்த்தாலும் ஊர் வளரும்! வாழும்!

- அருள்நெறித்தந்தை

தமிழ் அருச்சனை

(மகாவித்துவான். **சி. அருணைவடிவேல் முதலியார்**)

நால்வர் நெறி

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே! மாமறைநூல் தான்எங்கே!
எந்தைபிரான் அஞ்செழுத்தெங் கே.

என்னும் சிவானந்தமாலை வெண்பாவில் கூறியுள்ளபடி சங்க காலத்தை அடுத்து "நால்வர்" எனத் தொகைக் குறிப்பால் குறிப்பிடப்படுகின்ற அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் - என்னும் நால்வர் ஆசிரியர் தமிழ்நாட்டில் அவதரித்துத் தங்கள் அருட்பணியினை ஆற்றாதிருப்பின், சைவ சமயம் மறைந்து, மறைந்த இடமும் புல் முளைத்துப் போயிருக்கும்.

சைவம் மட்டும் தானா? "மாமறை நூல்" எனப்படும் வேதப் பாடல்கள்தாம் தமிழ் நாட்டில் எங்கேனும் ஒலிக்குமோ? எங்கும் நாத்திகம் ஒன்றே நடம் புரியும். நால்வர் நற்றமிழ் பற்றி எளிமையாக எண்ணுவோர் யாவரும் இதனை ஆழச் சிந்தித்தல் வேண்டும்.

மறுமுறை எழுச்சி

தமிழ் நாட்டில் திருக்கோயில்களில் தமிழ் அருச்சனை பற்றிய கிளர்ச்சி சில ஆண்டுகட்கு முன் தோன்றிப் பின் அடங்கிவிட்டது. ஆயினும் அது மறுமுறை எழுச்சியாக இப்பொழுது தோன்றியுள்ளது. அதுபற்றி மாறுபட்ட கருத்துக்களைப் பலர் வெளியிடுகின்றனர்.

மறுப்புரைகள்

திருக்கோயில்களில் தமிழ் அருச்சனை நிகழ்த்துதலை மறுப்பவர்கள் கோயில் வழிபாட்டு முறைகள் அனைத்தும் ஆரிய மொழியில் உள்ள வேதம், ஆகமம் என்பவற்றில் சொல்லியுள்ளபடி ஆரிய மொழியாலே நிகழ்ந்து வருகின்றன. "இம்முறை என்று தோன்றிற்று" என்று சொல்ல இயலாது. காலம் காலமாக நடைபெற்று வருவது; இதனை மாற்ற முயல்வது தான்தோன்றித்தனமாக முடியும்" என்கின்றனர்.

கால எல்லை அறிய இயலாமை பற்றியே ஒரு நிகழ்ச்சியை "காலம் கடந்தது" - என்று சொல்லிவிட முடியாது.

உலகம் கடல், நிலம், மலை என்னும் பிரிவுகளை உடையது. ஆயினும் கடல் முதலியவைகளும் ஒரு காலத்தில் தோன்றிய என்றே அறிஞர் கூறுவர்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே" என்னும் "வெண்பாமாலை வரி" எல்லாம் ஒரு காலத்தில் தோன்றியவைதாம் என்பதைக் குறிப்பிடுகின்றது.

"நிலம் உயிர்கள் வாழும் இடமாக மாறியதும் ஒரு காலத்தில் தான்" என்பர் அறிவியலார்.

கால எல்லை அறியப்படாதவற்றை "தொன்மையானவை" எனக் கூறலாமேயன்றி "காலத்தை கடந்தது" - எனக் கூற இயலாது.

ஆரிய வழிபாடு

இனி, தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் ஆரியமொழி வழிபாட்டு மொழி ஆனது ஒரு கால கட்டத்தில்தான் என்பதற்குத் திரிலோசன சிவாசாரியார் தம்முடைய சித்தாந்த சாராவளியில் கிரியா பாதமுடிவில்.

"ராஜேந்திர சோழன் என்னும் பெயருள்ள சோழராஜன் ஒருவன் பூமியாளும் காலத்தில் கங்காஸ்நானத்திற்குப் போனபோது அவ்விடத்தில் சைவாசாரியார்களைக் கண்டு, ஸ்நானஞ் செய்து திரும்பிவரும் போது அந்த சைவாசாரியார்களை அழைத்துக் கொண்டு வந்து தன்னுடைய ராஜ்யத்தில் ஸ்தாபித்தான். அதுமுதல் காஞ்சி மண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் எங்கும் சைவ சம்பிரதாயம் விஸ்தாரமாயிற்று என்று அறிக" என்று கூறியிருப்பதே சான்றாக வல்லது.

தமிழின் தொன்மை

ஆரியத்தை விடுத்துத் தமிழை ஆராயின், அதுவும் "தோற்றம் அறியப்படாத தொன்மையுடையதே" என்பதை மறுப்பார் ஒருவரும் இல்லை.

இனி வரலாற்றை நோக்கினால் "ஆரியம் இந்திய நாட்டில் ஒரு காலத்தில் நுழைந்த நுழைவு மொழியே" எனத் திட்டவட்டமாகச் சொல்லப்படுகின்றது. அதுபற்றியே மனோன்மணியம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்

"சதுமறை ஆரியம்வருமுன் சகம்முழுதும் நினதாயின்,
முதுமொழிநீ அநாதி என மொழிவதும்ஓர் வியப்பாமோ"

என்று தெளிவுபெறப் பாடினார். அவரது கூற்றினை, "உண்மைக்குப் புறம்பானது" என விலக்குதல் இயலாது. ஏனெனில், அவரது கூற்றைக் கருத்தில் கொள்ளாமலே வேறு வகையில் – அஃதாவது அகழ்வாராய்ச்சி முதலியவற்றால் இந்திய நாட்டின் முதற்கால நிலைபற்றி ஆராய்கின்ற ஆராய்ச்சியாளரது கூற்றுக்கள் தம் இயல்பிலேயே சுந்தரம் பிள்ளையவர்களது முடிவை வலியுறுத்துகின்றன.

தெய்வமொழி

மேற்குறித்தபடி "இந்திய நாட்டின் தெய்வப் பொதுமொழி ஆரியம்" என்பது இன்று சிலரால் வலியுறுத்திக் கூறப்பட்டபோதிலும் சுந்தரம் பிள்ளையவர்களது கூற்றுப்படியும், ஆரியர் வருகைக்கு முன்பே தமிழர் உயரிய கடவுட் கொள்கை உடையவர்களாய் இருந்தனர் எனக் கூறும் ஆராய்ச்சியாளர் கூற்றுப்படியும் முதற்காலத்தில் தமிழே இந்திய நாட்டின் தெய்வ மொழியாகவும் விளங்கியிருந்தமை தெரியவருகின்றதன்றோ?

வாழ்வியல் மொழி

ஆரியம் இந்திய நாட்டின் பொது மொழியாய் விளங்குதல் சமயத் துறையில் அல்லது வாழ்வியல் முறையில் அன்று. வாழ்வியலில் இந்திய நாட்டின் உட்பகுதிகள் பலவற்றிலும் வேறு வேறு மொழிகளே வழங்கின. அந்நிலையில் ஆரியம் இந்தியாவில் எந்த ஒரு பகுதிக்கும் வாழ்வியல் மொழியாக இருந்தமைக்குச் சான்றில்லை. அதற்குக் காரணம் ஆரியர்கள் பலப்பல கட்டங்களில் பல்வேறு வழிகளால் இந்தியாவிற்கு வந்து, பலப்பல இடங்களில் சிறுபான்மையராகவும் பெரும்பான்மையராகவும் குடியமர்ந்ததனால், அவ்விடத்து வழங்கிய மொழியையே தாங்களும் தங்கள் தாய்மொழி போலவே கொண்டு

வழங்கி, வாழ்க்கையை நடத்தியதே. நாள் போகப்போக ஆரியருள்ளும் கல்விமுறையால் கற்றவர்கள் தவிர, ஏனையோர் ஆரியம் அறியாதவரேயாயினர். அதனால் ஆரியம் எந்த ஒரு உள்நாட்டிலும் வாழ்வியல் மொழியாய் வழங்கவில்லை. இதனையும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்

"ஆரியம்போல் உலகவழக்கு
அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்நினைந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

எனக் கூறினார். இதனால் ஆரியர் ஆரியம் தங்கள் மொழி எனக் கூறுதல் பழைய வரலாற்றைக் கொண்டன்றி. இன்றுள்ள நடைமுறையைக் கொண்டன்று.

வேதச் சிறப்பு

மேற்கூறிப்போந்த வரலாற்றால் இந்திய நாட்டின் ஒரு கால கட்டம் தனித்தமிழ்க் காலமாய் இருந்தமை புலனாதலால், அந்நிலைமை எத்தகைய சூழ்நிலையால் மாறி ஆரியம் இந்திய நாட்டுத் தெய்வ மொழியாகும் நிலைமை உண்டாயிற்று என்பதை இன்று நாம் அறிந்து கூற இயலாது.

ஆரியர்க்கும், தமிழர்க்கும் இடையில் போராட்டம் இருந்தமைக்கு ஆரிய வேதத்திலேயே சான்றுகள் உள்ளன. அதனால் ஆரியம், இந்திய நாட்டின் தெய்வ மொழியாகும் நிலைமையை எளிதில் பெற்றுவிட்டதாகச் சொல்ல இயலாது. ஆகவே, பல போராட்டங்களில் எவ்வகையிலோ ஆரியர், "தங்கள் வேதமே வேதம்; தங்கள் மொழியே தெய்வமொழி" என நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றவராயினர். அதுவழியாக அவர்கள் தங்களை "நிலத்தேவர்" (பூசுரர்) என்றும் சொல்லிக்கொண்டனர். ஆகவே, இன்று திருக்கோயில்களில் தமிழ் அருச்சனைக்கு இடம் அளிப்பது, தமிழுக்கு மறுவாழ்வு அளிப்பதாகுமேயல்லது, படைப்புக் காலத்திலிருந்தே இயல்பாக அமைந்த ஒரு நிலைமைக்குச் சிதைவு செய்வதாக ஆகாது.

தமிழின் சிறப்பு

ஆரியம் வாராத காலத்தில் தமிழ் சிறப்புற்று விளங்கியிருக்கலாம். ஆரியம் வந்தபின் இந்திய நாட்டில் வேறு எந்த ஒருமொழியும் ஆரியத்தோடு ஒத்த பெருமையைப் பெறவில்லை என்று ஒரு புது நியாயத்தைச் சிலர் முன்மொழியலாம். அதனை வேறுசிலர் வலியுறுத்தவும் செய்யலாம். அதனை நடுநிலையாளர்கள் ஏலார், ஏனெனில் "ஆரியத்திற்கு நிகராகா - என்னும் கூற்று ஏனைய மொழிகளுக்குப் பொருந்தலாம்; தமிழிற்கு அது பொருந்தாது" எனத் தமிழ்ச் சான்றோர்கள் மறுத்துள்ளனர்.

எடுத்துக்காட்டு

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ"

(பரஞ்சோதி திருவிளையாடல். நாட்டுப்படலம்-57)

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்!"

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர், இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர், இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினார் என்றால் இவ்
இருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ!"

(காஞ்சிப்புராணம் - தழுவக் குழைந்த படலம்.248, 249)

"தமிழ், இலக்கண இலக்கிய வளம் உடையதாய் இருக்கலாம்; ஆயினும் தெய்வ மொழியாகச் சொல்ல இயலுமோ?" என யாரேனும் வினவினால் அதற்கும் பரஞ்சோதி முனிவர் தக்க விடை கூறியுள்ளார்.

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"
(திருவிளையாடற் புராணம். நாட்டுப்படலம்-58)

திருமுறை கண்ட புராணமும் திருநெறித் தமிழின் தெய்வத் தன்மையை,

"எரியினிடை வேவாது; ஆற்றெதிரே ஓடும்;
என்புக்கும் உயிர்கொடுக்கும்; இடுநஞ்சு ஆற்றும்;
கரியை வளைவிக்கும்; கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையில் உறக் காற்றுங் காணே"

எனக் கூறுகின்றது.

இனிச் சிவபெருமான் தானே செய்த அகப்பொருள் இலக்கண நூல் நக்கீரரது உரையுடன் இன்றும் பயிலப்பட்டு வருகின்றது.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன்காண்" என அப்பர் அருளிச் செய்த - சிவபெருமான் "தருமி" என்னும் அடியவருக்காகப் பாடிக் கொடுத்த "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் அகப்பொருட் பாடல் "குறுந்தொகை" என்னும் தொகை நூலின் முதற்பாட்டாக மிளிர்கின்றது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சீகாளத்திப் புராணம்,

"மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி
இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பில் பாடை
அனைத்தும் வென்று ஆரியத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
உள்நினைந்து ஏத்தல் செய்வாம்"

எனக் கூறிற்று.

(தொடரும்)

திருவள்ளுவம் போற்றி

(புலவர். **திருக்குறள் நாவை. சிவம்**)

1.	அகரமாய்	நிற்கும்	ஆதியே	போற்றி!
2.	வையம்	வளர்க்கும்	வான்மழை	போற்றி!
3.	பெருமை	சான்ற	பெரியோர்	போற்றி!
4.	ஆக்கம்	சேர்க்கும்	அறனே	போற்றி!
5.	இன்பம்	பெருக்கும்	இல்லறம்	போற்றி!
6.	வாழ்க்கைத்	துணைநல	வலிவே	போற்றி!
7.	மக்கட்	பேற்றின்	மாண்பே	போற்றி!
8.	ஆருயிர்	மகிழும்	அன்பே	போற்றி!
9.	விருந்தைப்	பேணும்	விருப்பே	போற்றி!
10.	இனியவை	கூறும்	இயல்பே	போற்றி!
11.	நன்றி	மறவா	நயனே	போற்றி!
12.	நடுவு	நிலைமை	நலமே	போற்றி!
13.	ஆக்கம்	தூண்டும்	அடக்கமே	போற்றி!
14.	உயிரினும்	மேலாம்	ஒழுக்கமே	போற்றி!
15.	பிறனில்	விழையாப்	பெற்றியே	போற்றி!
16.	புகழை	நல்கும்	பொறையே	போற்றி!
17.	அழுக்கா	றகற்றும்	ஆற்றலே	போற்றி!
18.	பிறர்பொருள்	விரும்பா	பெருஞ்செயல்	போற்றி!
19.	புறஞ்சொலல்	தவிர்க்கும்	பொலிவே	போற்றி!
20.	பயனில	சொல்லாப்	பண்பே	போற்றி!
21.	தீவினை	அஞ்சும்	தெளிவே	போற்றி!
22.	ஒப்புர	வறியும்	உயர்வே	போற்றி!
23.	ஈந்து	மகிழும்	ஈகையே	போற்றி!
24.	பொய்யா	வாழ்வின்	புகழே	போற்றி!
25.	அல்லல்	அறுக்கும்	அருளே	போற்றி!
26.	புலாலை	மறுக்கும்	பொற்பே	போற்றி!

27. தம்செயல் செய்யும் தவமே போற்றி!
28. கூடா ஒழுக்கம் கொள்ளாய்ப் போற்றி!
29. களவை வேண்டா கனிவே போற்றி!
30. வாய்மை பேணும் மனமே போற்றி!
31. சினத்தை அகற்றும் சிறப்பே போற்றி!
32. இன்னா செய்யா எழிலே போற்றி!
33. கொல்லா நலத்தின் குணமே போற்றி!
34. நிலையிலா உலகில் நிலைப்பாய் போற்றி!
35. துன்பம் விலக்கும் துறவே போற்றி!
36. மெய்ம்மை உணர்த்தும் மேன்மையே போற்றி!
37. அவாவினை அறுக்கும் அமைதியே போற்றி!
38. உலகில் வலிய ஊழே போற்றி!
39. இறையின் மாட்சியாம் ஏற்றமே போற்றி!
40. கசடெலாம் நீக்கும் கல்வியே போற்றி!
41. கல்லா மையினை கரைப்பாய் போற்றி!
42. கேடிலாச் செல்வம் கேள்வியே போற்றி!
43. அற்றம் காக்கும் அறிவே போற்றி!
44. குற்றம் கடியும் குறிப்பே போற்றி!
45. பெரியார் துணைகொள் பெருமையே போற்றி!
46. சிற்றினம் சேரா சீர்மையே போற்றி!
47. தெரிந்து செயல்படும் செப்பமே போற்றி!
48. வலிமை யறியும் வனப்பே போற்றி!
49. காலம் அறியும் கருத்தே போற்றி!
50. இடத்தை அறியும் எண்ணமே போற்றி!
51. தெரிந்து தெளியும் திண்மையே போற்றி!
52. தெரிந்து வினைசெயும் தெறிப்பே போற்றி!
53. சுற்றம் தழுவும் தொடர்பே போற்றி!
54. மறதி வாரா மாண்பே போற்றி!
55. செங்கோன் மையின் செறிவே போற்றி!
56. கொடுங்கோன் மையைக் குறைப்பாய் போற்றி!
57. அஞ்ச வைக்கா ஆண்மையே போற்றி!

58. இரக்கம் காட்டும் இனிமையே போற்றி!
59. ஒற்றரை ஆளும் உவப்பே போற்றி!
60. ஊக்கம் உடைமையின் உணர்வே போற்றி!
61. சோம்பல் விரட்டும் துணிவே போற்றி!
62. ஆள்வினை உடைமையின் அழகே போற்றி!
63. இடுக்கண் கலங்கா எழுச்சியே போற்றி!
64. அறனறி செயல்திறன் அமைச்சே போற்றி!
65. சொல்லுதல் வல்ல சுடரே போற்றி!
66. வினையின் தூய்மை வேட்பாய்ப் போற்றி!
67. வினையில் திட்பம் விளைப்பாய்ப் போற்றி!
68. வினையின் செயல்வகை விரிப்பாய்ப் போற்றி!
69. தூதின் இயல்பைத் துலக்குவாய் போற்றி!
70. மன்னர் உடன்பயில் மதிநலம் போற்றி!
71. குறிப்பறி திறனின் கொள்கையே போற்றி!
72. அவையை அறியும் ஆற்றலே போற்றி!
73. அவையினுக் கஞ்சா அறிவே போற்றி!
74. நலமெலாம் விளைக்கும் நாடே போற்றி!
75. அரிய சிறப்புடை அரணே போற்றி!
76. பொருள் செயல்வகையின் பொலிவே போற்றி!
77. படையின் மாட்சிப் பரப்பே போற்றி!
78. படைச்செ ருக்கின் பாங்கே போற்றி!
79. நவில்தொறும் நூல்நய நட்பே போற்றி!
80. நட்பா ராயும் நாட்டமே போற்றி!
81. பழைமை வாழ்த்தும் பதிவே போற்றி!
82. தீய நட்பைத் தேய்ப்பாய்ப் போற்றி!
83. கூடா நட்பைக் கோணுவாய் போற்றி!
84. பேதைமை விலக்கும் பேறே போற்றி!
85. புல்லறி வாண்மையைப் பொசுக்குவாய் போற்றி!
86. இகலை மாற்றும் இன்பமே போற்றி!
87. பகையின் மாட்சிப் பழிப்பாய்ப் போற்றி!
88. பகைத்திறம் தெரியும் பார்வையே போற்றி!

89.	உட்பகைத்	தீமை	ஒழிப்பாய்	போற்றி!
90.	பெரியார்	பேணும்	பீடே	போற்றி!
91.	தகையிலாப்	பெண்சொல்	தள்ளுவாய்ப்	போற்றி!
92.	பொதுமகள்	தொடர்பைப்	பொடிப்பாய்ப்	போற்றி!
93.	கள்ளுண்	ணாமையின்	காதலே	போற்றி!
94.	சூதினை	விரும்பாச்	சூளினாய்ப்	போற்றி!
95.	மருந்தே	வேண்டா	மாதவம்	போற்றி!
96.	குடிமை	புரக்கும்	குறிக்கோள்	போற்றி!
97.	மான	வாழ்வின்	மதிப்பே	போற்றி!
98.	பெருமிதம்	ஊட்டும்	பெருமையே	போற்றி!
99.	சான்றாண்	மையின்	சால்பே	போற்றி!
100.	பண்புடை	மையின்	பயனே	போற்றி!
101.	நன்றியில்	செல்வம்	நாடாப்	போற்றி!
102.	நாணுடை	மையை	நயப்பாய்ப்	போற்றி!
103.	குடிசெயல்	வகையைக்	கொஞ்சுவாய்	போற்றி!
104.	உலகைக்	காக்கும்	உழவே	போற்றி!
105.	நல்குர	வழிக்கும்	நலமே	போற்றி!
106.	இரவின்	கொடுமை	இழிப்பாய்ப்	போற்றி!
107.	இரவச்	சத்தை	இயம்புவாய்	போற்றி!
108.	கயமை	அழிக்கக்	கனல்வாய்ப்	போற்றி!

அகரமாய் நிற்கும் ஆதியே போற்றி!

வாழ்த்து!

வள்ளுவம் போற்றி வாழ்க!
வண்டமிழ்க் குடியும் வாழ்க!
உள்ளமும் தெளிய வாழ்க!
உலகமும் உயர வாழ்க!

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் பிற ஆக்கங்களில் இடம்பெறும் கருத்துக்களுக்கு அதனதனை எழுதியோர்களே பொறுப்பாவர்.

– **ஆசிரியர்**

சைவத்திரு மா. பட்டியப்பனார் மறைவு

கோயம்புத்தூர் சைவத்திரு மா. பட்டியப்பனார் 15.7.2008 இரவு 8.00 மணியளவில் சிவப்பேறடைந்தார். அப்பெருமகனார் மாரிமுத்துப்பிள்ளை - மருதாயி இணையருக்கு 12.6.1924இல் தோன்றினார். இவர்தம் இயற்பெயர் கோட்டீசுவரன், அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சூட்டிய பெயர் பட்டியப்பன் என்பதாகும். இப்பெயரே அவருக்கு நிலைத்த பெயராயிற்று. இவர் தமிழ் வித்துவான் தேர்ச்சி பெற்றவர். பண்டித அ.கந்தசாமி பிள்ளையிடம் திருமுறை, புராணம் ஆகியன கற்றார். திருவில்லாமாலை இராமு கனபாடிகளிடம் வேதம் கற்றார். கொல்லங்கோடு இராசலிங்க சிவாச்சாரியார், சித்தாந்த சரபம் ஈசான சிவாச்சாரி ஆகியோரிடம் ஆகமம் கற்றார். ஈசான சிவாச்சாரியாரிடம் சமய விசேட தீர்க்கை பெற்றார். பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் 1959 முதல் 1979 வரை பேராசிரியர் பணிபுரிந்தார்.

பேரூர் அருள்மிகு பட்டிப்பெருமான் திருக்கோயிலில் பேரூர்ப்புராணம் இருமுறை பாடமாக நடத்தினார். தணிகைப் புராணம், கந்தபுராணம் பாடமும் நடத்தினார். முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் அவர்கள் கோவைக்கு வந்திருந்த போது அவர் விருப்பத்திற்கு இணங்க பேரூர்ப்புராணம் பற்றிய குறிப்புக்களைக் கூறினார். அதற்காக அவர் அளித்த ரூ. 1000/- அன்பளிப்பை வைத்துக் கொள்ளாமல் "டாக்டர். இராதாகிருட்டிணன் இராசகோபுரக் கட்டளை" என்ற பெயரில் கட்டளை நிறுவினார். அருள்மிகு பட்டிப்பெருமான் திருக்கோயிலில் இருபது ஆண்டுகள் தேவாரப் பாடசாலை அமைத்து மதிப்பூதியமாக ரூ. 10/- பெற்றுக்கொண்டு குழந்தைகளுக்கு தேவாரம் கற்றுக் கொடுத்துச் சான்றிதழ் வழங்கிய புண்ணியர் இவர். திருக்கோயிலில் பரம்பரையாகத் திருப்பாமாலைத் திருப்பணி செய்தவரும் ஆவார்.

1948 முதல் 1992 வரை திருமுறை வழி ஏறத்தாழ ஆயிரம் திருமணங்கள் நடத்தியவர். கூலித்தொழிலாளி முதல் அரசர்கள் வரை வேறுபாடு இன்றித் திருமணச் சடங்குகளை இயற்றியுள்ளார். ஊத்துக்குளி

சிற்றரசர் அரண்மனைத் திருமணங்கள், பழையகோட்டைச் சிற்றரசர் அரண்மனைத் திருமணங்கள், மைசூர்ப் பேரரசர் அரண்மனைத் திருமணங்கள், ஜி.டி. நாயுடு இல்லத் திருமணம், ஏ.வி.எம். சரவணன் இல்லத் திருமணங்கள், மலைச்சாமி ஐ.ஏ.எஸ். இல்லத் திருமணங்கள் ஆகியன இவர் நடத்திவைத்த திருமணங்களில் குறிப்பிடத்தக்கவை ஆகும். மேலும் 1950 முதல் சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், சிறுதெய்வ கோயில்கள், சமாதிக் கோயில்கள் எனப்பல கோயில்களில் திருநெறிய தமிழ்வழிக் குடநீராட்டுகள் செய்து வைத்துள்ளார். அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திருப்புத்தூரில் 51 குண்டம், 51 வேதிகை அமைத்து நடத்திய திருவாசக முற்றோதல் வேள்வியில் பங்கு கொண்டவர்களில் இவரும் ஒருவர்.

1993- ஆண்டு பேரூர் மணிவாசகர் அருட்பணி மற்றத்தில் துணைத்தலைவர் பதவியேற்றார். மன்றத்தின் வாயிலாக பலநூறு இளைஞர்களைத் தமிழ்நெறி வழிபாட்டாளர்களாக உருவாக்கினார். இவரது பாசறையில் உருவான தமிழ் அந்தணர்கள் தமிழகமெங்கும் தமிழ் வழிபாட்டை பரப்பி வருகின்றனர்.

இவர் தமிழ்வழிச் சடங்குகளுக்காக எட்டு நூல்கள் எழுதியுள்ளார். இவரது சைவத்தமிழ்ப் பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "கச்சியப்ப முனிவர், சீர்பரவும் செல்வர்" என்ற பட்டம் வழங்கிப் பாராட்டியுள்ளது. தென்சேரி திருநாவுக்கரசுத் திருமடம் இவருக்கு "பண்ணிசைப்பாவலர்" என்ற பட்டமளித்துப் பாராட்டியுள்ளது.

இத்தகைய பெருமகனார் சைவத்திரு பட்டியப்பனார் அவர்களின் மறைவு சைவத்தமிழ் உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக்கொள்கிறது. அவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதிப் பெற இறைஞ்சுகிறது.

- ஆசிரியர்

தமிழாகமச் செல்வர் – பெரும்புலவர்
மா. பட்டியப்பனார் என்னும் கோட்டீசுவரனார் மறைவுக்குக்
கையறுநிலைப் பாடல்கள்

நாட்டீசுவ ரர்நற்றமிழ் நலஞ்சேர்க்கு நாயகனாம்
பாட்டீசுவ ரர்பலர்புகழ் பண்பாரும் கொங்கதனில்
வீட்டிசுவர! விமலையின் பாகத்தான் வினைதீர்ப்பான்
கோட்டீசுவ ரப்பெயர்தாங்கும் கோமானே! எங்குற்றாயே!

துணையாக இருந்தவனே தூத்தமிழின் காவலனே!
அணையாய் அமைந்திங்கே அரும்பணிக்கே ஆதரவாய்
பணையாய்ப் பலகாலும் பண்புநலம் சேர்த்தவனே!
இணையாய் இருந்தவனே எங்குற்றாய் எம்பிரிந்தே!

குன்றக்குடி அடிகளார் கூறுமுறை வழிபாடு
ஒன்றக்குடி வாழவே ஒண்டமிழில் ஆக்கினாய்!
வின்றக்குடி அடைந்தாய் விண்ணோர் வரவேற்க
நன்றக்குடி நாங்கள்தாம் நனிதுயரில் ஆழ்ந்திடவே!

பட்டீசர் கோயிற்பணி பரம்பரையாம் மாலைப்பணி
மட்டீங்கு செய்துவந்த மாரிமுத்து மாண்மகனே!
சட்டீங்கு தமிழ்ப்பயின்று தமிழ்ப்பணி சாந்தலிங்கர்
கட்டீசர் கல்லூரியில் காலம்பல உழைத்தனையே!

பச்சைத்தாய் பட்டீசர் பாதமலர் அணைந்தாயோ!
நச்சித்தான் நற்றமிழை நாளுங்கேட் கநயந்தாயோ
இச்சித்தாய் இன்னுயிரை இயமனாங்கு கொண்டானோ!
மெச்சித்தாய் எனநினைவோர் மெலிந்துகண் ணீர்விடவே!

"மனிதனின் துன்பங்களே அவனுடைய வளர்ச்சிக்கு ஊன்றுகோல்"

- மகாத்மா காந்தி

உலகத் திருக்குறள் பேரவைச் செய்திகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டக் கிளை

2008 சூன் 22ஆம் நாள், உலகத் திருக்குறள் பேரவைப் பொதுக்குழு முடிவுகள் விளக்கக் கூட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டக் கிளை சார்பில் நடைபெற்றது. 32 உறுப்பினர்கள் வந்திருந்தனர். 6 உறுப்பினர்கள் புது உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டனர். தலைமை வகித்த பொதுச் செயலாளர் திருக்குறள் சண்முகனார் தமது தலைமை உரையில் தீர்மானங்களை விளக்கி பேசினார். தொடர்ந்து சு. முருகானந்தம், சி. குணசேகரன், மு. லோகநாதன் பேராசிரியர். ச. சாமிமுத்து, அப்பரடிப்பொடி திருநாவுக்கரசு புலவர் வ. கேசவன், பி.வி. தேவராசு, குரு. கல்யாணசுந்தரம் திருமுறைச்செல்வர் மு. கணபதி ஆகியோர் உரையாற்றிய பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. "மக்கள் சிந்தனை" இதழில் ஒரு பகுதியை உலகத் திருக்குறள் பேரவை மற்றும் கிளைச் செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது அறிந்து தலைவர் தவத்திரு அடிகளார் அவர்கட்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

2. "மக்கள் சிந்தனை" இதழுக்கு உறுப்பினர் அனைவரும் ஆயுள் சந்தா அனுப்பி வைத்து உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்வது என்று தீர்மானிக்கப்பெற்றது.

3. திருச்சிராப்பள்ளியில் உலகத் திருக்குறள் பேரவைக்கு நூறு உறுப்பினர்களைச் சேர்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

4. மாணவர்களிடம் கல்வியின் இன்றியமையாமையை வற்புறுத்துவதோடு அதன் பயன்பாடுகள் குறித்து 40, 41, 42, 43 ஆகிய நான்கு அதிகாரங்களைக் கொண்ட கையேடுகள் ஐயாயிரம் தயாரித்து பள்ளி கல்லூரிகளுக்கு அனுப்பி வைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டக் கிளை

இக்கிளையின் இம்மாதக் கூட்டம் 26.07.08 அன்று மாலை 6.00 மணி அளவில் புதுக்கோட்டை கீழ நான்காம் வீதியில் உள்ள குமாரராசா கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவில் சூலை மாதத்தில் பிறந்த சான்றோர்களான காமராசர், மறைமலை அடிகளார் பற்றிய உரைகளும், புதுக்கோட்டை மண்ணின் மைந்தரான பி.யு. சின்னப்பா அவர்கள் பற்றிய உரையும் இடம்பெற்றது. இவ்வுரைகளை முறையே செல்வி. சீத்தாலெட்சுமி, பேரா. சி. பாலையா, புலவர் ச.தோ. தமிழ்மாறன் ஆகியோர் ஆற்றினர். "தொடரும்" இதழ் குறித்து திரு. சந்திரகாந்தன் அறிமுகம் செய்தார்.

குறள்வணக்கத்தை திரு. கி. ஹரிமோகன் அவர்களும், வரவேற்புரையை செயலர் தி.சு. மலையப்பன் அவர்களும் நன்றியுரையை திரு. மு. பழனியப்பன் அவர்களும் ஆற்றினர். விழாவிற்கு திருமதி. கமலா கருப்பையா அவர்கள் தலைமை ஏற்று விழாநிறைவில் உணவும் வழங்கினார்.

மருத்துவர் இராமமூர்த்தி, இராமுக்கண்ணு, புலவர். மு.ப., மகாசுந்தர், வேதையன், சிவாஜி, காசிநாதன், புகழேந்தி, ஜான்பிரிட்டோ, கண்ணன் முருகபாரதி, பேரா. மாரியப்பன், லூர்து மேரி, வளர்மதி மற்றும் பலர் விழாவிற்கு வருகை தந்தனர்.

வறுமொழியாளருடனும் வம்பப் பரத்தருடனும் கூடி வாழ்ந்தவர் வாழ்ந்ததில்லை; வாழ்ந்ததாக வரலாறும் இல்லை. மனிதராக வாழ முடியவில்லையானாலும் ஆங்காரம் தவிர்த்திடுமின்! செருக்கினை அறவே நீக்குமின்! புழுவைப் போல மண்ணை வளர்த்திடுக! மண் மேல் காடுகளை வளர்ப்பாயாக! வான்மழையைப் பெறுக! மனிதனாக வாழ முயல்வோம்! மனிதனாக - அதிமனிதனாக வாழும் துடிப்பில்லையானாலும் சராசரி மனிதனாகவாவது வாழக் கூடாதா? பழக்கம் தவிரப் பழகுமின்!

- அருள்நெறித்தந்தை

சிந்தனை வட்டம்

தங்கள் இதழ் தமிழ், தமிழறச் சிந்தனைகள் தாங்கி வருவது பெரிதும் மகிழ்வூட்டுகிறது. தங்கள் பணி மேலும் சிறந்து வளர எம் ஆவல். வளர்க தங்களின் தொண்டு.

முனைவர் கா. அரங்கசாமி அவர்களின் "முப்பாலின் முதற்குறட்பாக்களின் ஒத்திசைவு" என்ற கட்டுரையில் கண்டவாறு வெறுமனே பொருள் வழிப்பட்டு இன்னலுறும் நம் உலகை அன்பு அற வழியில் மாற்றும் ஆற்றல் நம் தமிழ் அறிவர் கூறியவாறு திருத்தி நடைபெற நாம் ஒல்லும் வகையில் உழைத்ததாக வேண்டியுள்ளது. அவ்வறச் செய்திகள் அவரவர் மொழியில் அனைவருக்கும் எட்டும் நிலை கொணர்ந்தால், இவ்வுலகம் இன்புறும்.

மேலும் முனைவர் வா.செ. குழந்தைசாமி போன்ற அரசிடம் சாய்கால் பெற்றுள்ள அறிஞர்கள் துணிந்து உண்மைகளை எடுத்துரைத்துத் தீர்வு காண முயலுதல் நலம் பயக்கும்.

செவ்வியல் மொழியின் தகுதிகளை வரையறை செய்த வல்லுநர் குழுவினர் நாக்கு தகுதிகளை வரையறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

1. அதில் மிகப் பழமையான நூல்களை அஃதாவது 1500 முதல் 2000 ஆண்டுகள் என்று கீழெல்லை வகுத்ததை ஒருவாறு ஏற்றாலும் மேலெல்லையாக 2000 ஆண்டுகள் என்பது சமற்கிருதம் போன்ற மக்களால் பேசப்படாத, எங்கும் எத்திசையிலும் வழங்கப்படாத மொழிக்கு வேண்டுமானால் மேலெல்லை வகுத்தது சரியாக இருக்கலாம். ஆனால் ஐம்பதாயிரம் ஆண்டுகளாக மக்கள் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இருந்து இன்றும் வாழ்ந்துவரும் தமிழ் மொழிக்கு மேலெல்லை கூறுவது சரியன்று என்பதைக் கட்டுரையாசிரியர் அரசுக்கு எடுத்துக்கூறி திருத்தம் செய்தல் வேண்டும். தகுதி இரண்டில் அவர் காட்டும் "பண்பாட்டுப் பாரம்பரியம்" போன்றவை வழங்கும் மொழிக்கே இயல்வதாகும். சமற்கிருதத்தைப் பயன்படுத்தி வாழ்வோர் கூட மக்கள் வழக்கில் உள்ள மொழிகளையே பேசி வாழ்ந்து வந்துள்ளனர்.

தகுதி மூன்றில் அவர் குறிப்பிடும் தகுதி சான்ற இலக்கியங்கள் அதாவது கடன் பெறாதவை என்பது மிகவும் ஆய்வுக்கு உரியதாகும்.

அதுபோல் ஒத்த இலட்சியம், கண்ணியம், பொதுமை, பகுத்தறிவு, ஒழுங்கு போன்ற பண்புகள் சான்ற சமற்கிருத இலக்கியங்களின் பட்டியல் அவர் தந்தால் நன்று. தமிழ் இலக்கியங்களோடு ஒப்ப வைத்துப் பார்க்கும் சிறப்பு சமற்கிருத இலக்கியத்திற்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறியே!

– **இளமாற அடிகள்,** கெ. கல்லுப்பட்டி.

தமிழ் ஆண்டு 2039 ஆடி இதழ் பற்றிய கருத்துகள்.

பெருந்தலைவர் காமராசரின் உருவப்படம் மேலட்டையை அணி செய்கிறது. கர்மவீரர் காமராசரின் கல்விப் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டு. வே.மா. திருப்பத்தூர் வட்டத்தில் கொரட்டி என்று ஒரு சிற்றூர். அங்கோர் உயர்நிலைப்பள்ளி 1964–65இல் தொடங்கப்பட்டது. ஒன்பதாம் வகுப்பில் ஒன்பது பேரே. (இந்நாளில் இந்தக் குறைந்த எண்ணிக்கை இருந்தால் உயர்நிலைப்பள்ளியைத் தொடங்கமாட்டார்கள்) 10 ஆம் வகுப்பிலும், 11 ஆம் வகுப்பிலும் அதே ஒன்பது பேரே. அந்தப் பள்ளியில் முதல் தமிழாசிரியராகப் பணியாற்றினேன். அந்த ஒன்பது பேரும் பெரும்பாலும் ஆசிரியராகவும், ஒருசிலர் வேறு துறைகளிலும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளனர். அங்கு உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்தாமல் இருந்தால் ஒன்பது பேரில் அதிகப்படியாக மூவர்தான் அருகிலுள்ள திருப்பத்தூர் நகருக்குச் சென்று படித்திருப்பர். மீதி ஆறு பேர் எட்டாவதோடு நின்றிருப்பர்.

பாவலர்மணி ஆ. பழநி அவர்கள் எழுதியுள்ளது பற்றி :

நான் அவர் வேறு யாரோ எழுதிய பெரியபுராணத்தைப் படித்துவிட்டு எழுதியுள்ளதாக எண்ணவில்லை; குறிப்பிடவுமில்லை. அவர் குறிப்பிட்டுள்ளபடி நான் சேக்கிழாரும், புனிதவதியாரும் புகலாத, அகச்சான்றில்லாத குற்றச்சாட்டைக் கூறக் கூடாது என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டிருப்பவன். சான்றில்லாமல் நல்லதைச் சொன்னாலும் சொல்லலாம்; தீமையைச் சொல்லவே கூடாது. நான் "அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான் குற்றமே கூறிவிடும்" (980) குறள்நெறியை போற்றுபவன்.

"......இவை எல்லாம் "சிவன் செயல்" காரணமாகத்தான் நடந்தன என்று சேக்கிழார் சொல்லியுள்ளாரா? ...... சேக்கிழாரின பெரியபுராணத்தில் எந்தப பாடலில் இதற்கு ஆதாரம் இருக்கின்றது" என்று வினவியுள்ளார். இது நல்லவினா. அதற்கான விடை வருமாறு :

இளையான்குடி மாறநாயனார் புராணத்தில்,

"செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வதன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதினும் வல்லர் என்றறிவிக்கவே
...." என்று சேக்கிழார் பாடுகிறார். (பாடல் எண். 445)

இந்தப் பாடலே சான்று (ஆதாரம்).

இளையான்குடி மாறநாயனார் வறுமையுற்றபோதும் விருந்தோம்பலில் வல்லர் (வல்லவர்) என்பது சிவனுக்குத் தெரியும். ஆனால் இதனை உலகத்தார்க்கு அறிவிக்கவே அவரை வறுமையுறச் செய்து சோதிக்கிறார்.

சிவனுக்கு அனைத்தும் தெரியும். ஆனால் நாயன்மார்கள் வல்லவர்கள், கொண்ட கொள்கையில் உறுதியுடையவர்கள் என்பதை உலகத்தாருக்கு விளக்கிக் காட்டவே சோதனை என்ற நாடகமாடுகிறார். நாடகத்தின் இயக்குநர் சிவன். பெரியபுராணத்தில் வரும் பாத்திரங்களை அவன் ஆட்டுவிக்கிறான், அவன் ஆட்டுவித்தபடி அவர்கள் செயல்பட்டுள்ளனர். இதனை நாவுக்கரசர் "ஆட்டுவித்தால்" என்று தொடங்கும் பாடலில் (931) விளக்குகிறார்.

– புலவர். **ச.மு. விமலாந்தன்**, திருப்பத்தூர்



அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்





சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI - August 2008 **Price Rs. 5-00**

Date of Publication 20-08-2008

Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு ______ அவர்கள்

திரு. ஆதீனகர்த்தர் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி வழி

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166